அசல்

13.11.1934. சு. நடேசபிள்ளை.

2

p. 345 - 348. 
த.க. Vol. K.

RÂMANÂTHAN COLLEGE,
CHUNNAKAM. (Ceylon)
13. 11. 1934

அன்பும் அறிவும் சான்ற ஐய,

நீங்கள் அனுப்பிய கடிதமும் மகாவித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரப் புத்தகங்களும் கிடைத்தன. அவற்றிற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

யான் சில ஆண்டுகளுக்குமுன் எனது மாமனார் இராமநாதத் துரையவர்களுடன் சிதம்பரம் வந்திருந்த பொழுது தங்களைத் தரிசித்தது எனது நினைவில் நன்றாகப் பதிந்துள்ளது. எனது பாட்டனாரவர்களைத் தாங்கள் ~~[illegible]~~ நன்கறிந்தவர்கள் என்பது அப்பொழுது கேள்விப்பட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அவர்களைப் பற்றிய செய்திகளை மகாவித்வான் சரித்திரத்தில் தாங்கள் எழுதியிருப்பதை வாசித்து இப்பொழுது பெருமிதமாகப் புகழுகின்றேன்.

தாங்கள் வெளியிட்டுள்ள சரித்திரம் தமிழுலகத்திற்கு இதுவரையில் தாங்கள் செய்துள்ள பணிகளுள் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாக யான் கருதுகின்றேன். ஆங்கிலத்தில் மகாவித்வானைப் பதினெட்டாம் நூற்றாண்டில் திகழ்ந்த டாக்டர் ஜான்சன் சரித்திரத்தை எழுதிய பாஸ்வெல் என்று ஆங்கில உலகில் புலவர் சரிதங்கள் எழுதியவர்களுள் ஒப்பாரில்லாதவர் என்று பகழ்ந்து புகழ்கின்றனர். தாங்களும் அத்தகைய புகழைத் தாங்கள் இப்பொழுது தமிழுலகத்திற் பெற்றுள்ளீர்கள். தங்களது புத்தகத்தைப் பலர் அறிய விரும்புவர். தமிழ்மொழிக்குச் செய்யும் பணியாதலின் அதனை விரும்புவோர் வாங்கிப் பயன் பெறச் செய்வது தமிழ்மொழிக்கே செய்யும் பணியாதலின் அதனை வி.பி. யாக அனுப்பினால் 5 புத்தகங்களை எனக்கு வாங்கிக் கொள்கிறேன். அப்புத்தகங்களுடன் "பாசவதைப் பரணி" ஒரு பிரதியும் அனுப்பவேண்டுகின்றேன்.

யான் யாழ்ப்பாணத்தில் சென்ற ஆண்டில் ஆரம்பித்த "ஞாயிறு" என்ற பத்திரிகையைத் தாங்கள் கண்ணுற்றிருப்பீர்கள். அதன் "ஞாயிறு வாய்" என்ற தலையங்கத்தில் தங்களைப் பற்றி யான் சில எழுதியுள்ளேன். "செந்தமிழ் வெளியீடாவின்" அப்பத்திரிகையை யான் இயற்றி வெளியிட்ட பெருமையைப் பற்றித் தங்கள் அபிப்பிராயத்தை அறியவேண்டுமென்று ஆவலுடையவனாயிருக்கிறேன். தங்களுக்கு ஒரு கடிதம் எழுத நினைத்துக் கொண்டிருந்த காலத்தில் தங்களது கடிதம் கிடைத்தது ஒரு பாக்கியமே.

யான் இலங்கை சட்டநிரூபணசபையில் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதிப் பிரதிநிதியாக இருக்கிறேன். எனது மருமகனும் அவர்கள் தங்களது ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குப் பெருமை யான் வணங்கிக் கொண்டு வருகின்றேன்.

வதி

13.11.1934. சு. நடேசபிள்ளை.

RAMANATHAN COLLEGE,
CHUNNAKAM.

யான் மார்கழி மாதத்தில் அங்கு வர நினைக்கிறேன். அப்பொழுது
தங்களைச் சந்திக்க ஆவலுற்றிருக்கிறேன்.

தாங்கள் இடைவிடாமல் செய்து வரும் தெய்வத் தமிழ்மொழிப்
பணி யாழ்ப்பாணத்துக்கும் நீடுபெற்று பாலிக்குமாறு சிவபெருமானை வழுத்து
கிறேன்.

இங்ஙனம்
அன்பன்
சு. நடேசபிள்ளை.

pages
345-348.
த. க. VOL

உ
(1)

Ramanathan College.
Chunnakam. (Ceylon)
13 – 11 – 1934

அன்பும் அறிவும் சான்ற ஐய;

தாங்கள் அனுப்பிய கடிதமும் மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரப் புத்தகங்களும் கிடைத்தன. அவற்றிற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

யான் சில ஆண்டுகளுக்கு முன் எனது மாமனார் இராமநாதத்துரையவர்களுடன் சிதம்பரம் வந்திருந்தபொழுது தங்களைத் தரிசித்ததை எனது நினைவில் நன்றாகப் பதிந்துள்ளது. எனது பாட்டனாரவர்களைத் தாங்கள் நன்கறிந்தவர்கள் என்பதை அப்பொழுது கேள்விப்பட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அவர்களைப் பற்றிய குறிப்புகள் மஹாவித்வான் சரித்திரத்தில் தாங்கள் எழுதியிருப்பதை வாசித்து இப்பொழுது களிபேருவகை யுறுகின்றேன். தாங்கள் வெளியிட்டுள்ள சரிதம் தமிழுலகிற்கு இதுவரையால் தாங்கள் செய்துள்ள பணிகளுள் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாக யான் கருதுகின்றேன். ஆங்கிலத்தில் மஹாவித்துவானாக பதினெட்டாம் நூற்றாண்டில் திகழ்ந்த டாக்டர் ஜான்சன் சரிதத்தை எழுதிய பாஸ்வெல் என்ற ஆசிரியர் உலகில் புலவர் சரிதங்கள் எழுதியவர்களுள் ஒப்பாரும் மிக்காரும் இல் ~~[illegible]~~ லாதவர் என்று படைத்த புகழுக்கிணையான புகழைத் தாங்கள் இப்பொழுது தமிழகத்திற் பெற்றுள்ளீர்கள். தங்களது புத்தகத்தைப் பரவச் செய்வது தமிழ்மொழிக்கே செய்யும் பணியாதலின் அதனை விருப்புடன் ஏற்றுக் கொள்கிறேன். 5. புத்தகங்களை எனக்கு வி.பி.யாக அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றேன். அப்புத்தகங்களுடன் பாசவதைப்பரணி ஒரு பிரதியும் அனுப்பியருள்க.

யான் யாழ்ப்பாணத்தில் சென்ற ஆண்டில் ஆரம்பித்த "ஞாயிறு" என்னும் பத்திரிகையைத் தாங்கள் கண்ணுற்றிருப்பீர்கள். அதன் "தோற்றுவாய்" என்ற தலையங்கத்தில் தங்களைப் பற்றி யான் சில எழுதியுள்ளேன். அப்பத்திரிகையால் யான் எழுதிவெளியிட்ட "சகுந்தலை வெண்பாவின்" பகுதிகளைப் பற்றித் தாங்கள் அபிப்பிராயத்தை அறிய வேண்டுமென்று ஆவலுற்றவனாய் தங்களுக்கு ஒரு கடிதம் எழுதநினைத்துக் கொண்டிருந்த

காலத்தில் தங்களது நட்பு கிடைத்தது ஒரு பாக்கியமே. யான் இலங்கை அரசாங்க சபையில் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதிப் பிரதிநிதியாக இருக்கிறேன். எனது மாமனார் அவர்கள் தாபித்த கல்லூரிகளைப் பரிபாலிக்கும் கடமையையாற்றிக் கொண்டு வருகின்றேன்.

யான் மார்கழி மாதத்தில் சென்னைக்கு வர நினைத்திருக்கிறேன். அப்பொழுது தங்களைச் சந்திக்க ஆவலுள்ளவனாய் இருக்கிறேன்.

தாங்கள் திடகாத்திரமாயிருந்து இன்னும் நெடுங்காலம் தமிழ்மொழிப் பணியாற்றுவதற்குத் திருவருள் பாலிக்குமாறு சிவபெருமானை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்
அன்பன்
சு. நடேசப்பிள்ளை.

13-11-1934

36

அ. நடேசபிள்ளை.

page 345 to 348.
தி. க. vol 'K'
Copied

39